ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

15 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

ක්‍රිස්තියානි ධර්මය I, II
கிறிஸ்தவம் I, II
Christianity I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கிறிஸ்தவம் I

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ✳ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- ✳ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

**1.** "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று கூறியவர்
(1) எலிசபத் (2) இறைவாக்கினர் அன்னா
(3) மார்த்தாள் (4) மரியா

**2.** ஆண்டவர் இயேசுவின் மேன்மையைப்பற்றி கூறிய இறைவாக்கினர்
(1) மீக்கா (2) எசாயா (3) மலாக்கி (4) எரேமியா

**3.** மரிப்பதற்கு முன்னர் மேசியாவைக் காண்பார் என்று யாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது?
(1) திருமுழுக்கு யோவான் (2) தேவாலயத்தின் சிமியோன்
(3) யூதமதகுரு செக்கரியா (4) பவுல்

**4.** ஆண்டவர் இயேசுவை சிலுவையிலறைவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட இடம்
(1) கபாலஸ்தலம் (2) சமாரியா (3) கலிலேயா (4) யோப்பா

**5.** பாவ சுபாவத்தை உணர்ந்தவராக கீழ்ப்படிவுடன் சீடத்துவத்திற்குப் பதிலளித்த முதற் சீடர்
(1) யாக்கோபு (2) அந்திரேயா (3) யோவான் (4) சீமோன் பேதுரு

**6.** என்றும் நிலைத்திருக்கும் தலைசிறந்த சத்தியம்
(1) அன்பு (2) பொறுமை (3) இரக்கம் (4) தாழ்மை

**7.** திருமுழுக்கு யோவானின் கற்பித்தலின்படி இறைவிருப்பத்திற்கேற்ப வாழ நாங்கள் செய்ய வேண்டியது யாது?
(1) திருச்சட்டத்தைக் கவனமாகப் பின்பற்றுதல்
(2) மனந்திரும்பலுக்கூடாக எமது வாழ்வை மாற்றல்
(3) அரசியல் அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்றல்
(4) சமயத் தலைவர்களோடு இணைந்து செயற்படல்

**8.** இயேசுவின் பிறப்பிற்கு அதிக காலத்திற்கு முன்னர்
(1) அதைக் குறித்தான இறைவாக்கு உரைக்கப்பட்டது.
(2) அதைக் குறித்தான இறைவாக்கு மௌனமாயிருந்தது.
(3) அதைக் குறித்தான இறைவாக்கு இரகசியமாக இருந்தது.
(4) அதைக் குறித்து மதத் தலைவர்களுக்கு மட்டும் உரைக்கப்பட்டது.

[பக். 2 ஐப் பார்க்க

**9.** இயேசு கற்பித்த இறைவேண்டலின்படி மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள நாங்கள் என்ன செய்ய வேண்டும்?
(1) மன்னிப்புக் கேட்பவர்களுக்கு மன்னிப்பைக் கொடுத்தல்
(2) எமக்கு குற்றம் செய்தவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்தல்
(3) ஏழுதரம் மன்னிப்பை வழங்கல்
(4) நிபந்தனைகளுடன் மன்னிப்பு வழங்கல்

**10.** ஏழை விதவையின் காணிக்கையின் மூலம் கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்ளும் பாடம்,
(1) இறை சட்டத்தின் அடிப்படையில் செலுத்தி திருப்தியடைவது.
(2) தியாக மனப்பான்மையுடன் செலுத்தி திருப்தியடைவது.
(3) கேட்கப்படும்போது மாத்திரம் செலுத்தி திருப்தியடைவது.
(4) தேவையான அளவு வைத்துக்கொண்டு மிகுதியைச் செலுத்தி திருப்தியடைவது.

**11.** யூத அறுவடை பண்டிகையானது
(1) பஸ்கா பண்டிகை (2) பெந்தகொஸ்தே பண்டிகை
(3) கூடார பண்டிகை (4) பியுரிம் பண்டிகை

**12.** கடவுள் எமது வாழ்விற்கு உரிமையாகத் தந்த உயர்ந்த கொடையானது
(1) கிறிஸ்தவர் என்ற பெயரைப் பெற்றுக்கொள்வதாகும்.
(2) உலக வாழ்வின் பலனை அனுபவிக்கக் கூடியதாக இருத்தலாகும்.
(3) திருச்சபை அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதாகும்.
(4) நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வதாகும்.

**13.** சுயத்தை வெறுக்க விரும்பும் ஒரு கிறிஸ்தவனின் மன்றாடலானது
(1) சகல வேண்டுதல்களும் நிறைவேற வேண்டும் என்பதாகும்.
(2) செழிப்பான வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதாகும்.
(3) உமது விருப்பம் நிறைவேற வேண்டும் என்பதாகும்.
(4) அதி உயர்ந்த உணவு கிடைக்க வேண்டும் என்பதாகும்.

**14.** இயேசுவின் பிறப்பை அர்த்தமுள்ளதாகக் கொண்டாட கிறிஸ்தவர்களாகிய நாங்கள் செய்ய வேண்டியது
(1) தேவையிருப்போரைத் தேடி அவர்களுடன் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வைப் பகிர்ந்து கொள்ளல்
(2) நத்தார் தாத்தா, நத்தார் மரம் ஆகியன குறித்து அதிக கவனம் செலுத்துதல்
(3) நத்தார் தினக் கொண்டாட்டங்களுக்காக ஆயத்தமாதல்
(4) ஆலயக் கட்டிடத்தை ஒளிமயமாக்கி அலங்கரிப்புச் செய்தல்

**15.** உலகம் முழுவதும் பட்டினி ஏற்படும் என இறைவாக்கு உரைத்த இறைவாக்கினர்
(1) கலோதேசியஸ் (2) அகபு (3) யோவான் மாற்கு (4) பவுல்

**16.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - மீண்டும் தாயின் கருவறைக்குள் சென்று பிறக்க வேண்டும் என்பதாகும்.
B - பாவத்திற்கு மரித்து புதிய வாழ்விற்கு பிறக்க வேண்டும் என்பதாகும்.
C - மீண்டும் பரலோகத்தில் பிறக்க வேண்டும் என்பதாகும்.
D - சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதாகும்.
மீண்டும் பிறக்க வேண்டும் என இயேசு நிக்கதேமுவிற்கு கூறியதன் அர்த்தத்திற்கு அதிக பொருத்தமான இரண்டு பதில்களைக் கொண்ட விடை யாது?
(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**17.** குடும்ப அலகுகளுக்கூடாகச் சமூகத்தைக் கட்டியெழுப்ப நாங்கள் செய்ய வேண்டியது யாது?
(1) குடும்பத்திற்குள் சுயத்திற்கு முதலிடம் கொடுத்தல்
(2) குடும்ப அந்தஸ்தை உயர்த்துவதற்கு முதலிடம் கொடுத்தல்
(3) குடும்பத்தின் தனிப்பட்ட விருப்பத்திற்கு முதலிடம் கொடுத்தல்
(4) குடும்பத்தினுள் அன்பிற்கும் அமைதிக்கும் பராமரிப்பிற்கும் முதலிடம் கொடுத்தல்

**18.** நீங்கள் ஒரு பாடசாலை மாணவராக தூய வாழ்வைப் பின்பற்ற, இருக்க வேண்டிய இரண்டு பண்புகள்
(1) போதைவஸ்து பயன்பாடு போன்றவற்றிலிருந்து விலகியிருத்தலும் இறைபக்தியுடன் வாழ்தலும்
(2) ஆசிரியர்களுக்குக் கீழ்படிதலும் சமூக அலைக்கேற்ப வாழ்தலும்
(3) பெற்றோரை மதிப்பதும் வலிமையற்ற மாணவர்களை ஒடுக்குவதும்
(4) நண்பர்கள் குழுவின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வதும் தீமைக்கு அடிமையாதலும்.

[பக். 3 ஐப் பார்க்க

5244

**19.** திருமுழுக்கு யோவானின் பிறப்பு மற்றும் பணியின் அடிப்படையில் எமது வாழ்வை நாம் முன்னெடுக்க வேண்டியது
(1) மக்களின் திட்டங்களின்படி
(2) தலைவர்களின் திட்டங்களின்படி
(3) இறைவனின் திட்டங்களின்படி
(4) அமைப்புக்களின் திட்டங்களின்படி

**20.** கிறிஸ்தவர்கள் சகவாழ்வுடன் வாழ்வதென்பது
(1) கலப்புத் திருமணத்தால் உருவாகும் குடும்ப அலகை நிராகரித்தல் மூலமாகும்.
(2) அனைத்து நம்பிக்கைகளும் சமமானது என ஏற்றுக்கொள்ளல் மூலமாகும்.
(3) சமூக நலனுக்காக செயல்படும் அமைப்புக்களோடு ஒன்றிணைந்து செயற்படல் மூலமாகும்.
(4) எமது நம்பிக்கைக்கூடாக மற்றவருக்கு அழுத்தம் கொடுத்தல் மூலமாகும்.

**21.** கடவுளின் வல்லமை குறித்து அவருக்கு இருந்த அதிசயமான விசுவாசத்தை, இயேசு பாராட்டிய பிற இனத்தவர்
(1) கப்பர்தகூமில் இருந்த குருடன்
(2) கப்பர்தகூமில் இருந்த நூற்றுக்கதிபதி
(3) எரிகோவில் இருந்த செல்வந்தன்
(4) யவீருவின் மகள்

**22.** கூடார தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு மறைதூது பணிக்கு வலுவூட்டிய ஆக்கிலா, பிறிஸ்கிலாவிடமிருந்து நாங்கள் கற்றுக்கொள்ளும் பாடமாவது
(1) இறை பணியில் ஈடுபடுவதற்கு உலக பூர்வமான ஒரு தொழில் தேவை என்பதாகும்.
(2) இறை பணியில் ஈடுபட்டு, தமது உலக பூர்வமான தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்பதாகும்.
(3) ஒரே தொழிலைச் செய்கிறவர்கள் ஒன்றுசேர வேண்டும் என்பதாகும்.
(4) இறைபணியில் ஈடுபடுகின்ற வேளையில் தமக்கு இருக்கும் ஆற்றல்களின் முழுமைப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

**23.** யோவான் நற்செய்தியில் கூறப்பட்டிருக்கும் 'செமியோன்' என்ற கிரேக்கச் சொல்லின் அர்த்தம்
(1) அருட்பொழிவு பெற்றவர்
(2) சிறப்பாகப் பயிற்றுவித்து அனுப்பப்பட்டவர்
(3) முழுமையான சமாதானம்
(4) இறைபெலத்தின் அடையாளம்

**24.** 'அகாபே' என்ற கிரேக்கச் சொல்லின் அர்த்தம்
(1) பிறருக்கு நன்மைபுரிகின்ற அன்பாகும்.
(2) பிறருக்காக அரிப்பணிக்கப்பட்ட பொறுமையாகும்.
(3) பிறருக்குச் செய்யும் சேவையாகும்.
(4) பிறரின் நன்மைக்காக காட்டும் தாழ்மையாகும்.

**25.** "எவரையும் அச்சுறுத்தி எதனையும் பறிக்காதீர்கள்" என்று யார், யாருக்குக் கூறினார்?
(1) இயேசு படைவீரர்களுக்கு
(2) பரிசேயர் படைவீரர்களுக்கு
(3) திருமுழுக்கு யோவான் படைவீரர்களுக்கு
(4) சதுசேயர் படைவீரர்களுக்கு

**26.** புனிதத் தன்மையைக் கருத்தில் கொள்ளாது செயல்பட்ட யூத மக்களைத் தட்டி எழுப்ப இயேசு செய்த செயல்
(1) தேவாலயத்தில் அருளுரை ஆற்றியது
(2) எருசேலமைப் பாதுகாக்கச் செயற்பட்டமை
(3) தேவாலயத்தைத் தூய்மையாக்கியது
(4) எருசேலமைச் சுற்றிலும் மாத்திரம் பணி செய்தமை

**27.** இயேசுவின் நாசரேத்து அறிக்கையை இன்று நாங்கள் எவ்வாறு செயற்படுத்தலாம்?
(1) கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதன் மூலம்
(2) தெரிவுசெய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மாத்திரம் ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதன் மூலம்
(3) எமது குடும்பங்களுக்கு மட்டுப்படுத்திய ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதன் மூலம்
(4) அனைவருக்குமான ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கு உதவுவதன் மூலம்

**28.** கிறிஸ்தவர்களாக எமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டியது
(1) ஆலய வழிபாடுகளில் தவறாது கலந்துக் கொள்வதன் மூலமாகும்.
(2) சமூகத்தில் உயர் அந்தஸ்திலிருப்போர் பக்கம் சாய்ந்து சவால்களை வெற்றி கொள்வதன் மூலமாகும்.
(3) அன்பு, பொறுமை, நீதி உள்ளடங்கிய வாழ்வை வாழ்வதன் மூலமாகும்.
(4) அனைவரின் செயல்களையும் ஏற்றுக்கொண்டு வாழ்வதன் மூலமாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**29.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - இயேசுவைக் கண்டுகொள்ள எதிர்பார்ப்பும், பொறுமையும் தேவை

B - இயேசுவைக் கண்டுகொள்ள முதிர் வயதே சிறந்த நேரம்

C - இயேசுவை அடையாளம் காண, தூய ஆவியின் வழிகாட்டல் தேவை

D - இயேசுவைக் கண்டுகொள்ள சமய வட்டாரங்களில் இருக்க வேண்டும்

சிமியோன், அன்னாள் ஆகியோருடைய வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் இரண்டு விடயங்களைக் கொண்ட விடை யாது?

(1) A, B (2) A, C (3) B, C (4) B, D

**30.** திருமுழுக்கு யோவானின் போதனைகளை நீர் இன்று உமது பாடசாலையில் சிறப்பாகச் செயற்படுத்தக் கூடியதாக இருப்பது

(1) நண்பர்களோடு மாத்திரம் தமது பொருட்களைப் பரிமாறிக் கொள்ள உற்சாகமூட்டுவதன் மூலமாகும்.
(2) உணவில்லாத மாணவர்களுடன் தமது உணவைப் பகிர்ந்துகொள்ள உற்சாகமூட்டுவதன் மூலமாகும்.
(3) மாணவ தலைவர்களை மற்ற மாணவர்களிடமிருந்து உணவைப் பெற்றுக்கொள்ள உற்சாகமூட்டுவதன் மூலமாகும்.
(4) மாணவர்களின் வசதி பாராமல் எல்லா மாணவர்களையும் உணவு கொண்டுவர உந்துதல் மூலமாகும்.

**31.** இறை அரசின் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்ளத் தாழ்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட இயேசு கூறிய உவமை

(1) பரிசேயனும் ஆயக்காரனும் பற்றிய உவமை
(2) இரண்டு அத்திவாரங்களைப் பற்றிய உவமை
(3) காணாமற்போன மகனைப் பற்றிய உவமை
(4) திராட்சைத் தோட்டச் சொந்தக்காரன் பற்றிய உவமை

**32.** விதைப்பவனின் உவமைக்கூடாக வெளிவரும் சத்தியமானது

(1) இறைவார்த்தைக்கு மட்டும் செவிகொடுத்தல்
(2) இறைவார்த்தையை கற்றுக்கொள்வதில் மாத்திரம் தங்கி இருத்தல்
(3) இறைவார்த்தைக்கூடாக தடைகளைத் தாண்டி வளர்ச்சியடைய செயல்படல்
(4) இறைவார்த்தை குறித்து விவாதத்தில் ஈடுபடல்

**33.** "அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டி போலும், உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும்..." என்ற வாக்கியத்தில் சொல்லப்படுவது,

(1) இயேசுவின் சேவகத் தன்மையின் கைவிடப்பட்ட நிலை
(2) இயேசுவின் சேவகத் தன்மையின் துன்பப்பட்ட நிலை
(3) இயேசுவின் சேவகத் தன்மையின் தியாகப் பலி நிலை
(4) இயேசுவின் சேவகத் தன்மையின் கலக்கமடைந்த நிலை

**34.** இறையரசின் கொள்கைகளின்படி நடக்கும் நீங்கள் செய்ய வேண்டியது,

(1) மாற்று திறனாளிகளைக் கவனத்தில் கொள்ளாதிருத்தல்
(2) தமது திறமைகளுக்கூடாகத் திறமை குறைந்த மாணவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்
(3) தமக்கு விருப்பமானவர்களோடு மாத்திரம் குழுக்களை அமைத்தல்
(4) தமக்கு குற்றங்களைச் செய்த மாணவர்களைப் புறக்கணித்தல்

**35.** "ஒவ்வொருவரும் தம் திராட்சைத் தோட்டத்தின் நடுவிலும் அத்தி மரத்தின் அடியிலும் அமர்ந்திருப்பர்" என்று மீக்கா இறைவாக்கினர் எதனை அர்த்தப்படுத்தினார்?

(1) சுபீட்சமான ஒரு காலம் வருமென
(2) துன்பமான ஒரு காலம் வருமென
(3) மக்கள் தமது வீடுகளை இழந்து போவார்களென
(4) மரஞ்செடி கொடிகளுக்குக் கீழே வசிக்க வேண்டிவருமென

**36.** மால்தா தீவில் சிறைக் கைதியான பவுலுக்கும் மற்றையவருக்கும் கிடைத்த விருந்தோம்பலுக்கூடாக இன்று நாம் கற்றுக்கொள்ளும் பாடம் யாது?

(1) எமக்கு உதவி புரிவோருக்கு உதவுதல்
(2) சிறைக் கைதிகளுக்கு உதவுதல்
(3) தெரியாதவர்களுக்கு தராதரம் பார்க்காமல் உதவுதல்
(4) மற்றவர்களுடைய புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்காக உதவுதல்

[பக். 5 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

**37.** வெள்ளை, கறுப்பின மக்கள் மத்தியில் தொடர்பை ஏற்படுத்த செயல்பட்ட குருவானவர்

(1) நெல்சன் மண்டேலா
(2) மைக்கல் ரொட்ரிகோ
(3) இரண்டாம் ஜூலாம் பவுல் பாப்பரசர்
(4) மைக்கல் லெப்ஸ்லி

**38.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - உண்மையான மாற்றத்திற்காக அமைதியாகக் காத்திருத்தல்
B - வன்முறைகளுக்கூடாக நீதியை நிலைநாட்டல்
C - நீதியும் நேர்மையுமான சமூகத்தை ஏற்படுத்தல்
D - கைவிடப்பட்டோருக்கு அரவணைப்புக் கிடைக்க செயற்படல்

ஆமோஸின் பணி இன்றைய சமூகத்திற்கு தொடர்புபடுவது பற்றி எடுத்துக் கூறும் சரியான இரண்டு கூற்றுகளைக் கொண்ட விடை யாது?

(1) A, B
(2) A, C
(3) B, C
(4) C, D

**39.** பவுல் அடிகளார் ஏதேன்சில் ஆற்றிய செய்தியினூடாக இன்று கிறிஸ்தவப் பணியில் ஈடுபடுபவர்கள் கற்றுக்கொள்ளும் பாடம்

(1) பின்னடையாத வீரனாக பின்னணியைக் கருத்தில் கொள்ளாது இறைசெய்தியை அறிவித்தல்
(2) ஞானத்தோடு சமயப் பற்றுள்ளோருக்கு மாத்திரம் இறைசெய்தியை அறிவித்தல்
(3) ஞானத்தோடும் பின்னடையாத வீரனாகவும் இறைசெய்தியை அறிவித்தல்
(4) பலாத்காரத்தோடு பின்னடையாத வீரனாக இறைசெய்தியை அறிவித்தல்

**40.** பவுல் சிறைக் கைதியாக இருந்தவேளையில் செயற்பட்ட முறைக்கூடாக நாம் கற்றுக்கொள்ளும் பாடம்

(1) துன்பப்படுத்துபவர்களுக்கு எதிராகச் செயற்படல்
(2) துன்பங்களின் மத்தியிலும் இயேசு கிறிஸ்துவின் சாட்சிகளாகச் செயற்படல்
(3) எமக்கு உகந்த சூழ்நிலையில் மாத்திரம் சான்று பகிருதல்
(4) மற்றவர்களின் உதவிக்காக எதிர்பார்ப்புடன் காத்திருத்தல்

* *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[பக். 6 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**15 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| ක්‍රිස්තියානි ධර්මය | I, II |
| கிறிஸ்தவம் | I, II |
| Christianity | I, II |

## கிறிஸ்தவம் II

※ **முதலாம்** வினாவிற்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) (அ) விருத்தசேதனத்துடன் தொடர்புபட்ட முற்பிதா யார்?

(ஆ) 

".. அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றும்..." எனக் கூறிய இறைவாக்கினர் யார்?

(ii) "நீ மனம் திரும்பிய பின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து" என்று யார், யாருக்குக் கூறினார்கள்?

(iii) இறையரசை அறிவிக்க இயேசு பயன்படுத்திய **இரண்டு** முறைகளைக் குறிப்பிடுக.

(iv) 'அழகான வாசலில்' இருந்த ஊனமுற்ற நபருக்கு **தங்களிடத்தில் இல்லை** என்று யோவானும், பேதுறுவும் கூறிய **இரண்டு** விடயங்களை எழுதுக.

(v) 'தூய ஆவி', 'நெருப்பு' ஆகிய **இரு** அடையாளங்களுக்கூடாக திருவிவிலியம் எதனை வெளிப்படுத்துகின்றது?

(vi) "உங்கள் இடையை வரிந்து கட்டிக் கொள்ளுங்கள், விளக்குகளும் எரிந்து கொண்டிருக்கட்டும்" என இயேசு முன்வைத்த இவ் அடையாளங்களுக்கூடாக கிறிஸ்தவர்களிடத்தில் எதிர்பார்க்கப்படும் **இரண்டு** பிரதான பண்புகளை எழுதுக.

(vii) பவுல் தமது மூன்றாவது மறைதூதுப் பயணத்தில் 'எபேசுவில்' சந்தித்த **இரண்டு** சவால்களைக் குறிப்பிடுக.

(viii) சமத்துவம், சகவாழ்வு என்பவற்றுக்கு ஆதிகிறிஸ்தவ சபையினால் முன்னெடுக்கப்பட்ட **இரண்டு** நலன்புரிப் பணிகளை எழுதுக.

(ix) பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி பின்வரும் வேத வசனத்தைப் பூர்த்தி செய்யவும்.
"அமைதி ஏற்படுத்துவோர் ........................................................ ஏனெனில் அவர்கள் கடவுளின் ........................................................ என அழைக்கப்படுவர்."

(x) 'இடுக்கான வழி', 'அகன்ற வழி' ஆகிய கோட்பாடுகளுக்கூடாக இயேசு கற்பிக்கும் **இரண்டு** சத்தியங்களும் யாவை?

**2.** (i) இயேசு பாலை நிலத்தில் சந்தித்த சோதனைகளில் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) இயேசு **மூன்று** சோதனைகளுக்கும் வெற்றிகரமாகக் கொடுத்த மறுமொழியை வெவ்வேறாகக் குறிப்பிடுக.

(iii) எமது அன்றாட வாழ்வில் நாங்கள் முகங்கொடுக்கும் சோதனைகளை எவ்வாறு வெற்றிகொள்ளலாம் என **ஐந்து** விடயங்கள் மூலம் விளக்குக.

[பக். 7 ஐப் பார்க்க

3. (i) இறையரசின் வளர்ச்சி குறித்து இயேசு கூறிய **இரண்டு** உவமைகளைக் குறிப்பிடுக.

(ii) முதலாவதாகத் தமக்கு கொடுக்கப்பட்ட திருமண விருந்திற்கான அழைப்பை நிராகரித்த யூதர்கள் கொடுத்த **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக.

(iii) இறையரசின் பெறுமதிகளுக்கேற்ப நீங்கள் எவ்வாறு செயல்படலாம் என **ஐந்து** குறிப்புகளுக்கூடாக விளக்குக.

4. (i) (அ) கிறிஸ்தவ சபையின் முதலாவது மறை சாட்சி யார்?

(ஆ) அவர் எவ்வாறு கொல்லப்பட்டார்?

(ii) பவுல் தமது 1ஆம் மற்றும் 2ஆம் மறைத்தூதுப் பணியில் முகங்கொடுத்த **மூன்று** துன்பமான சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(iii) முதல் கிறிஸ்தவ மறைசாட்சி மற்றும் பவுலின் துன்பங்களைக் கருத்திற்கொண்டு இன்று நாங்கள் மறைத்தூதுப் பணியில் ஈடுபடக்கூடிய முறையை **ஐந்து** விடயங்களுக்கூடாக விளக்குக.

5. (i) (அ) இயேசுவின் எந்தச் சிறப்பு நிகழ்வைக் கிறிஸ்தவர்கள் உயிர்ப்பின் பண்டிகையின் போது கொண்டாடுகிறார்கள்?

(ஆ) யூதர்கள் பாஸ்கா பண்டிகையின்போது புளிப்பில்லாத அப்பத்தை உண்பதனூடாக எந்த நிகழ்வை நினைவு கூர்ந்தனர்?

(ii) உயிர்ப்பின் பண்டிகையைச் சுற்றி இயேசுவின் துன்பம், மரணத்தோடு தொடர்புடைய **மூன்று** முக்கிய சம்பவங்களைக் குறிப்பிடுக.

(iii) மேற்கூறப்பட்ட (ii) இல் உமது பதில்களை அடிப்படையாகக் கொண்டு, உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக வாழ நாங்கள் கற்றுக் கொள்ளும் **ஐந்து** பாடங்களைக் குறிப்பிடுக.

6. (i) சாதாரண உலகில் நாம் நிராகரிக்கும் தலைமைத்துவப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) இயேசுவிடத்தில் காணப்படும் **மூன்று** தலைமைத்துவப் பண்புகளைக் குறிப்பிடுக.

(iii) இறை அரசின் பிரஜையாக உங்கள் பாடசாலையில் தலைமைத்துவப் பணியில் நீங்கள் ஈடுபடும் போது எவ்வாறு செயற்படுவீர்கள் என்று **ஐந்து** உதாரணங்களுடன் விளக்குக.

7. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினைத்** தெரிவுசெய்து, சிறுகுறிப்பெழுதுக. அவற்றிற்கென தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளை அடிப்படையாகக் கொள்க.

(i) கிறிஸ்தவ ஒருமைப்பாடு

- பன்முகத் தன்மையின் ஒருமைப்பாடு
- இயேசுவின் முதன்மைக் குருத்துவ மன்றாடல்
- சிலுவை நல்லிணக்கத்தைக் கொண்டுவரும்
- ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கான அழைப்பு
- ஒருமைப்பாட்டை உருவாக்க நான் செய்ய வேண்டியது

(ii) வாழ்வு மாற்றம்

- புதிய ஏற்பாட்டில் முழுமையான வாழ்வு மாற்றத்துக்குள்ளாகிய நபர்கள்
- நீங்கள் அடையாளப்படுத்துகின்ற மக்கள் மத்தியில் முழுமையான வாழ்வு மாற்றத்தை உருவாக்கும் காரணிகள்
- அவர்களின் வாழ்வு மாற்றத்திற்கூடாக நாம் கற்றுக் கொள்ளும் பாடம்
- எமது வாழ்வு மாற்றத்தில் பங்குபெறும் நபர்கள், சூழ்நிலைகள்
- முழுமையான வாழ்வு மாற்றத்தில் காணப்படும் பெறுமதியான பண்புகள்

[பக். 8 ஐப் பார்க்க

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

(iii) தோற்றம் மாறல் / மறுரூபமடைதல்

- தோற்றம் மாறல் சம்பவம்
- இயேசுவோடு தோன்றிய இரண்டு நபர்களின் முக்கியத்துவம்
- சீடர்களின் பதில்
- கேட்கப்பட்ட குரலுக்கூடாகச் சீடர்கள் பெற்ற செய்தி
- இயேசுவைக் குறித்தான புதிய புரிந்துணர்வு

(iv) தூய வாழ்வு

- தூய வாழ்விற்கான அழைப்பு
- தூய வாழ்விற்கான அடையாளங்கள்
- தூய வாழ்விற்கான அழைப்பிற்குக் கொடுக்கும் பதில்
- தூய வாழ்விற்கான அவசியம்
- தூய வாழ்வு வாழ்தல்

***

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන්|පසුගිය ප්‍රශ්න පත්‍ර|වැඩ පොත් සඟරා|O/L ප්‍රශ්න පත්‍ර|
A/L ප්‍රශ්න පත්‍ර|අනුමාන ප්‍රශ්න පත්‍ර|අතිරේක කියවීම් පොත්|
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න